# UNITY SERVICE

Christians of Jaffna saw the three bishops - The Rt. Rev. Dr. S Jebanesan of the Church of South India in Jaffna. The Rt. Rev Thomas Soundaranayagam of Jaffna Diocese of the Roman Catholic Church and the Rt. Rev Kenneth Fernando of the Anglican Church, Colombo Diocese.

The three Bishops spoke on the Unity of Church. Bishop Kennth Fernando based his speech on the Old Testament. Bishop Soundaranayagam based his on the Epistles and Bishop Jebanesan on the Gospels.

Rev Fr. R. Jeyaseelan of the Society for Unity. Roman Catholic Church chaired this meeting. All Christians. both the Roman Catholics and the Protestants joined in the singing of songs of praise led in turn by the Roman Church, Anglican, Methodist and the Church of South India and the Salvation Army. Leaders of the above Churches also prayed for the unity.

The Rev. Anthony A. Paul of Jaffna Christian Union proposed the vote of thanks. He also handed over a letter of request for "Ecumenical Centre" for Jaffna Christian Union to Bishop Kenneth Fetnando, to be handed over to the National Christian Council of Srilanka.

The meeting came to an end with benediction pronounced by the three Bishops jointly.

The meeting which was held in Peto Hall of St. John's College was well attended by members of all denominations.


# THE MORNING STAR

Registered as a Newspaper (Established 1841) published Every Friday

Vol 160 Jaffna Friday 24th. March 2000 No. 06

*RIGHTEOUSNESS EXALTETH A NATION BUT SIN IS A REPROACH TO ANY PEOPLE*


## St. Patrick's College 150 years old

St. Patrick's College celebrates the 150th year of its founding, this year. The celebrations started with Eucharistic service on St. Patrick's Day, in the College Chapel on March 17 th at 7. 00 a m The Mass was celebrated by the Bishop of Jaffna The Rt Rev. Thomas Soundaranayagam. Fellowship breakfast followed. The first day's play of "Battle of the Golds" started at 10.30 a m with the hoisting of Flags of both colleges, St. Patrick's College and Jaffna College.

## Bishop 60 years on March 28

Our Bishop, The Rt Rev Dr S Jebanesan will be 60 on March 28th. He will be in Vanni, visiting the Churches and seeing the suffering people there. Friends of Bishop Jebanesan and Diocese can contribute towards 'Bishop Jebanesan's 60th Birthday Workers' Stipend Endowment." Account Nos are: @1- 0001517 - Wellawatta at CBC S / A No 30667 Jaffna

## Mr. Rajanayagam Retires

Mr G. Rajanayagam retired as Principal of Jaffna College on his reaching 60th Birthday on Febreuary 22nd. Well wishers organized a 60th Birthday celebration in the Ottley Hall. Mr & Mrs Rajanayagam were brought in a procession from their house to Ottley Hall for the function. The students of Jaffna College accorded him a farewell on 23rd. The Staff bid him farewell at lunch on the same day

## Bishop's Visits

Our Bishop The Rt Rev Dr S Jebanesan is in South Sri Lanka visiting Churches in Nuwara Eliya, Batticaloa and Vanni He visited Nuwara - Eliya on the 17th and Batticaloa on 19th. He travels to Vanni on 24th. There he will conduct lent services, open new buildings and conduct ordination service.

## Working Committee of the Synod

The working Committee of Synod of CSI was held on March 16th and 17th. The Rev Jeyakumaran represented Diocese as its delegate He returned on March 19th.

## SLCCCA Director in Jaffna

The SLCCA Director, The Rev Pon. Anantharajah was in Jaffna from 16th March to 21st. He visited the entire Children's Homes and Day Care centers. He also conducted a seminar for all the wardens on 20th March. He explained the new visions of KNH to the Children's Home Board of JDCSI at a Garden party on March 19th

## Battle of the Golds

St. Patricks College beat Jaffna College by an innings and 59 runs at the 83rd Battle of the Golds encounter. Scores were SPC 252 for 6. JC 83 & 110. Banujeyan scored 64 for SPC and G. Pragash scored 61 for JC in 2nd innings. J. C. Banujeyan(SPC) G R Thevarajan (SPC) and N S Senthuran (JC) were the best Batsman, Bowler and Fielder respectively. Best Partnership prize went to M. Prasanna Joseph & G Arulraj (SPC) Man of the Match was G. Arulraj of St. Patrick's College

## Dr. Chandra Ambalavanar Felicitated

Dr. Mrs. Chandra Ambalavanar, who was presented with Paul Harrison Award by Christian Medical College, Vellore for sustained service in a needy area, was felicitated by the Jaffna Diocesan Council on 3rd March at 3. 30 p. m.

The Bishop, The Rt Rev. Dr S Jebanesan chaired the function. The Rev Anthony A. Paul and Mr. G Rajanayagam spoke of behalf of the clergy laity respectively. The Rev. S C Arnold Secretary of the Medical Board read the award and Mr N. A. Vimalendran, Chairman of the Board garlanded Dr Ambalavanar.

## Bishop Ambalavanar's Book Released

In Obedience to the Heavenly Vision is the book compiled by the family of Late Bishop The Rt Rev Dr. D. J. Ambalavanar. Dr Mrs. Chandra Ambalavanar released this book, which includes the life and writings of Bishop Ambalavanar on March 4th The first copy was given to The Rev D. R. Ambalavanar, Elder Brother of Late Bishop. The second and third copies were given to the Rt. Rev. Dr S Jebanesan Bishop in Jaffna, C. S. I. and The Rt Rev Thomas Sountharanayagam Bishop of Jaffna Roman Catholic Church. Proceeds from the sale of the book would be used to enhance Bishop Ambalavanar 60th Birthday Clergy Pension Fund.

The Rt. Rev. Dr S Jebanesan and the Rt. Rev. Thomas Sountharanayagam extolled the services rendered by the Late Bishop to the Christian Community and to the Tamil Community at large. The Rev. Fr. Dr. Michael Sountharanayagam Director of Studies, St. Francis Xavior Seminary, Jaffna reviewed the book.

The function presided by the Rev. Anthony A. Paul started with the lighting of the traditional lamp and prayer led by the Rev D. R. Ambalavanar Dr. Dhayalan Ambalavanar proposed the vote of thanks and our Bishop pronounced the benediction. The large gathering, which assembled at the function, joined in the fellowship tea.

## The 8th Annual Carol Service of the Sri Lanka & College.

This event took place on the 4th of December 1999 at 7. 00 p. m. West Ellesmere United Church, 37, Machington Circle, Scarborough, Ontario, Canada, witnessed by more than 600 people. Year by year participating school, as well as, witnessing members initiated by a few, and dedicated members, this is well attended Almost every School or College sang a Christmas Carol. with a new style. Some of these schools actively involved themselves from the time it was started. It was very enjoyable and pleasant to listen to them.

In 1998, the volunteer committee decided to channel the funds collected, to our Mission Hospitals at Manipay & Inuvil It was received and acknowledged by Dr. Chandra Ambalavanar. Last year, we decided to send the funds to "Navajeevanam". We collected about $ 1,733. 00 and it was sent. Three needed special thanks are Theepan Thambyrajah, Mrs K. P Muttiah and Mr. Jogaratnam

# எஸ். ஜே. எழுதுவது

நானோ நம்முடைய கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவின் சிலுவையைக் குறித்தேயல்லாமல் வேறொன்றையுங் குறித்து ஒருக்காலும் மேன்மை பாராட்டாதிருப்பேனாக கலா 6 : 14

சிலுவைத் தண்டனை ரோமப் பேரரசில் சர்வாதாரணமாக விருந்தது. இயேசுக் கிறிஸ்வின் காலத்திலும் அதற்குமுன்னரும் எருசலேமிலும் அதனைச் சூழவுள்ள பகுதிகளும் சிலுவைகள் பரந்து காணப்பட்டன.

இன்று இலங்கையிலே துப்பாக்கிகள் எவ்வளவு செறிந்து காணப்படுகின்றனவோ, அவ்வாறே பாலஸ்தீனாவிலும் சிலுவைகள் பரந்து காணப்பட்டன ஒருவன் தடக்கி விழுந்தால் சிலுவை யொன்றிலே தான் தடக்கி விழுவான் என்னும் அளவுக்கு சிலுவைகள் செறிந்திருந்தன.

மகா அலக்சாந்தர் திரு நாட்டைக் கைப்பற்றிய பொழுது,, 2000 பேரைச் சிலுவையில் அறைந்து கொன்றத் இயேசுவின் காலத்தில், அவர் வாழ்ந்த கலிலேயாவில் Varun என்ற ரோமத் தளபதி 2000 ம் பேரை சிலுவையில் அறைந்து கொன்றான். Titus என்ற ரோம அதிகாரி கி பி 70 ல் எருசலேமை முற்றுகையிட்டு தேவாலயத்தை அழித்த பின் அனைத்து வாலிபர்களையும் சிலுவையில் அறையும் படி செய்தான். அதனால் எருசலேமில் சிலுவை நாட்டுவதற்கே இடமில்லாதிருந்தது என்று வரலாற்றாசிரியர் ஜொசபஸ் குறிப்பிட்டுள்ளார்.

சிலுவை அவமானச் சின்னம்: அது உரோமப் பிரஜைகளுக்கல்ல ஆனால் உரோமர் பிடித்து வரும் அடிமைகளை, கலகக்காரர்களை கொலையாளிகளை சிலுவையில் அறைந்து கொல்லுவார்கள். சிலுவை மரணத்திற்கு ஒருவனைத் தீர்ப்பிட்டால் அவன் உடைகளைக் களைந்து வாரால் அடிப்பித்து, சிலுவை நாட்டப்படும் இடத்திற்கு நடப்பித்துச் செல்வார்கள். அவன் செய்த குற்றத்தைப் பற்றிய விளம்பரம் அவனது கழுத்தில் இருக்கும், இல்லாவிட்டால் ஒருவன் அதைப் பலகையில் எழுதி தீர்ப்புக்கு உட்பட்டவனுக்கு முன்னால் பிடித்துக் கொண்டு போவார்கள்.

பவுல் அப்போஸ்தலன் இந்த அவமானச் சின்னத்தைக்குறித்தே கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சிலுவையையேயல்லாமல் வேறொன்றைக் குறித்தும் மேன்மை பாராட்டாது இருப்பேனாக என்றுங் குறிப்பிட்டார். சிலுவையில் அறையப்பட்ட இயேசு, கிறிஸ்துவின் சிலுவை இதுவே அவரை ஆட்கொண்ட செய்தி!

கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவின் சிலுவை நம்மோடு என்ன பேசுகின்றது?

முதலாவதாக அது அக்கினிப் பிரவேசம்! இந்த உலகிலே பெரும் பெரும் சாதனைகளை நிகழ்த்தியவர்கள் உலகத்தாருக்கு தமது செய்கைகளினாலும் வார்த்தைகளினாலும் ஆசீர்வாதமாக விளங்கியவர்கள் எல்லாருமே அக்கினிப் பிரவேசம் செய்தவர்கள் தான்!

இதனை துன்பக்கேணி, எனலாம் தீயின் ஞானஸ்நானம் எனலாம்.

துன்பக் கேணியிலே குளித்தவன் தான் உலகின் துன்பங்களை விளங்கிக்கொள்ளக் கூடியவன்

அவனது செய்திதான் அல்லற் பட்டு ஆற்றாது கண்ணீர் வடிக்கும் தாய்க்கு, தந்தைக்கு, பிள்ளைக்கு ஆறுதல் அளிப்பதாய் இருக்கும்!

எபிரேயர் நிருப ஆக்கியோன் இயேசுவைப் பற்றிக் குறிப்பிடுகையில் அவர் எல்லாவற்றிலும் நம்மைப்போல சோதிக்கப்பட்டும். பாவம் இல்லாது இருந்தவர் என்று எழுதியுள்ளார்.

Dietrich Benhoffer என்ற ஜேர்மனிய இரத்தச் சாட்சி "துன்புறும் இறைவனே எமக்குத் துணையானவன்" என்று எழுதியுள்ளார். துன்புறும் திருச்சபையே கண்ணீரைத் துடைக்கவல்லது.

கிறிஸ்துவின் அர்ப்பணிப்பு. என் தேவனே என் தேவனே ஏன் என்னைக் கைவிட்டீர் என்ற அவலக் குரல் ஆபத்துக் காலத்தில் நமக்கு ஔடதமாக விளங்குகின்றது. இறைவன் எம்மோடு சேர்ந்து துயரடைகின்றார். நாம் ஆறுதல் பெறுகின்றோம்!

சிலுவை அக்கினிப் பிரவேசம் மட்டுமன்றி மன்னிப்பு அருளுவதாகவும் இருக்கின்றது.

நாம் இந்தப் பூவலகில் பிறந்தநாள் முதற்கொண்டு எத்தனையோ பாவங்களைச் செய்கிறோம்! தவறான தீர்மானங்களை எடுக்கிறோம்! பிழையான எண்ணங்களை வளர்த்துக்கொள்கின்றோம். இதனால் கடந்த காலத்தில் நாம் செய்த செயல்கள் நம்மை வாட்டி வதைக்கின்றன. மற்றவர்கள் எம்மை மன்னிக்கலாம். ஆனால் நாம் எம்மை மன்னிப்பது கடினம்.

பாவப்பரத்தால் நொந்து சோர்ந்தவர்களுக்கு சிலுவையே சாந்தியளிக்கின்றது. இந்த நிம்மதியைப் பற்றியே மீட்புக் கவிஞர் கிருஷ்ணபிள்ளை பின்வருமாறு பாடுகின்றார்.

வினைரேசர் வெம்பவமாங் கடல்
மூழ்கிய தீயனெமைக்
கரைசேர்த் துய்க்கவென்றே
புணையாயினைக் கஸ்மலியான்
பரசென் பற்றுகியே
எனைப்பற்றிய பற்றுவிடாய்
அரசே புன்னையல்லா பெனக்
கார்துணை யாருறவே

பாவத்தை மன்னிக்க கடவுளால் மட்டுமே முடியும். எல்லாப் பாவங்களும் கடவுளுக்கு விரோதமாகச் செய்யப்பட்ட பாவங்களே. மனிருக்கு எதிராகச் செய்யப்படும் கொடூரம், ஏமாற்று கொள்ளை, எல்லாமே கடவுளுக்கு விரோதமாகச் செய்யபட்டவைகளே.

தமது பாவங்கள் குற்றப் பணம் செலுத்தப்படாமல் தண்டனை இல்லாமல் மன்னிக்கப் படுகின்றது. இறைவன் மனிதனின் பாவத்தை இலவசமாக மன்னிக்கின்றார். அதற்காக அவர் குற்ற நிவாரண பலியாக மரிக்க வேண்டியதாயிற்று. அவர் உள்ளம் நொறுக்கப்பட்டது. தமது உயிரையே கொடுத்து நமது ஆன்ம இரட்சிப்பை ஏற்படுத்தினார். உலகம் தரமுடியாத சமாதானம் சாந்தி மன்னிக்கப்பட்டு விட்டோம் என்ற குதூகலம் சிலுவையினால் நமக்குக் கிட்டுகிறது. மூன்றாவதாக. சிலுவை நாம் ஒவ்வொருவரும் புனருத்தாரனம் செய்யப் படலாம் என்பதைக் காட்டுகின்றது. Any body Can be restored உனது உற்றார், உறவினரை, இழந்து விட்டேன் என்று இழந்து போய் விட்டாயா? என்று வாழ்நாளெல்லாம் வீணாய் போய் விட்டது என்று கலங்குகிறாயா? மற்றவர் உன்னை ஏளனம் செய்து ஒரம் கட்டிவிட்டனர் என்று ஏங்குகின்றாயா? சிலுவையைப்பார் எத்தகைய வேதனைகளில் அமிழ்ந்திருப்பவனையும் சிலுவை புனருத்தாரனம் செய்ய வல்லது நம்முடைய சுயநலம் பாவம் அக்கிரமம் அனைத்திலிருந்தும் நாம் மறுவாழ்வு பெற்று நாம் ஆனந்தமாக வாழ வேண்டுமெனில் சிலுவைதான் அதற்கு வழி

திருமறை பூவுலகத்தில் உள்ளவர்கள் யாவரையும் தேவன் தமது மரணத்தோடு ஒப்புரவாக்குகிறார் எனக்கூறுகிறது அன்பன் சிலுவை மன்னிப்பின் சிலுவை மறுவாழ்வு அளிக்கும் சிலுவை வெற்றிதரும் சிலுவையாக இருக்கிறது. சிலுவை மரணத்தை மேற்கொண்ட ஆண்டவர் "மரித்தேன் ஆனாலும் பிழைத்திருக்கிறேன்" என்றார். அவரது உயிர்ப்பு சிலுவையின் வெற்றியையும் மகிமையையும் உறுதிப்படுத்துகிறது. கிறிஸ்து உயிர்த்தெழுந்து தமது ஆவியினால் அனுப்பி தமது மரணத்தால் சம்பாதித்த இரட்சிப்பின் ஆசீர்வாதங்களை தமது அடியாரின் ஜீவியத்தில் உறுதிப்படுத்தினார் இதனாலேகான் நாணற்புல் போன்றிருந்தவர்கள் கன்மலையானார்கள். இனி அவர்களுக்கு பயமும் இல்லை; துக்கமும் இல்லை; அங்கலாய்ப்பும் இல்லை குரோதமும் இல்லை; இயேசுவின் சிலுவையே இந்த மாற்றத்தை கொண்டு வந்தது சிலுவையண்டை சேருவோம் மறு வாழ்வு பெறுவோம்.

## ஒன்று கூடல்

16 - 03 - 2000 சனிக்கிழமை காலை 10 00 மணிக்கு உடுவில் தேவாலயத்தில் சகல திருச்சபை பெண்களும் ஒன்று கூடினர். திருமதி தேவகுணானந்தன் தலைமையில் சிறப்பு ஆராதனை நடாத்தப்பட்டது. உடுவில் மகளிர் கல்லூரி மாணவிகள் சிறப்புப் பாடல் பாடினர் திருமதி கிருபா பவசிங்கம் (Least Coins) பெறுமதி குறைந்த நாணயங்கள் திருச்சபைகளில் எவ்வளவு பெறுமதி மிக்க காரியங்களைச் செயற்பட உதவுகின்றன என்ற விடயம் பற்றிச் சிறப்புச் சொற்பொழிவு ஆற்றினார் தனது செய்திக்கு ஆதாரமாக "விதவையின் காணிக்கை" மாற்கு 12 : 41 - 44 என்ற பகுதியை எடுத்து விளக்கினார். சாவகச்சேரி சபைப் போதகர் அம்மாவும் சிற்றி மிஷன் பெண்கள் சங்கத்தலைவியான திருமதி ஆனல்ட் ஜெபங்களில் வழிநடாத்தினர் ஆயர் அம்மா திருமதி விமலா ஜெபநேசன் வேதப் பாடம் வாசித்தார். ஏறக்குறைய 100க்கு மேற்பட்ட பெண்கள் இக் கூட்டத்தில் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. தேனீர் விருந்து முடிந்ததும் பிஷப் அம்மாவின் தலைமையில் எதிர்காலத் திட்டங்கள் பற்றி கலந்துரையாடலும் இடம் பெற்றது.

## இறையியல்...

யாரும் அறாது குழுவினரும் 24 - 03 - 2000 வெள்ளிக்கிழமை ஜெயபுரத்திற்கு செல்லும்போது இந்த நாள்கள் சனிஷ்ட இறையியல் கல்லூரிக்கு எடுத்து செல்லப்படும் என தெரிகிறது.

## மட்டு. இல் திடப்படுத்தல் ஆராதனை

### 51 அங்கத்தினர் திடப்படுத்தல் பெற்றனர்

19 - 03 - 2010 ஞாயிறு காலை 8 30 க்கு ஊறணி தூய யோவான் ஆலயத்தில் பேராயர் கலாநிதி S ஜெபநேசன் அவர்கள் தலைமையில் திடப்படுத்தல் வழிபாடு நடைபெற்றது இருதயபுரம், கல்லோடை, இத்தாவில், முறக்கொட்டாஞ்சேனை, ஊறணி. சபைகளை சேர்ந்த 57 பேர் புதிய அங்கத்தினராக சேர்த்துக்கொள்ளப்பட்டனர். வண S ஜெயநேசன் அவர்கள் வழிபாட்டினை வழி நடத்தினார். பேராயரிடம் அருட்பொழிவு பெறுவதற்காக அபேட்சகர்களை வண S ஜெயநேசன் முன்னிறுத்தினார். திருவிருந்து வழிபாட்டினை பேராயர் நடாத்த, வண ஜெயநேசன், வண அன்ரனி செபஸ்டியன் வண குமரேசன், சகோ ஜோன். வண ஜெறோம் போல் ஆகியோர் உதவிபுரிந்தனர்.

பேராயர் தமது அருளுரையில் பல சிறப்பு பெற்றவர்களெல்லாம் ஒரு சிறிய தவறினாலேயே [illegible] வீழ்ச்சியடைந்தனர் விவிலியத்தில் சிம்சோன் பாவத்தோடு விளையாடினான் பாவத்தோடு விளையாடுதல், இறுதியில் நம்மை பாவத்திலுள்ளே அமிழ்த்திவிடும் என்பதற்கு சிம்சோன் உதாரணமானான். எனவே, பாம்போடு பழகேல் என்றவாறு, பாவத்தை விட்டு விலகியிருப்போம் என குறிப்பிட்டார்.

## பேராயர் விஜயங்கள்

தென்னிந்திய திருச்சபை பேராயர் வண கலாநிதி எஸ் ஜெபநேசன் மார்ச் மாதம் 17ம் திகதி நுவரேலியாவிற்கும் 19 ம் திகதி மட்டக்களப்பிற்கும் 24ம் திகதி கிளிநொச்சி முல்லத்தீவு மாவட்டங்களுக்கும் விஜயம் செய்தார் எனத்தெரிகிறது இவ்விடங்களில் அவர் சென்று பலந்து ஆராதனைகளை நடாத்துகிறார் எனத்தெரிகிறது?

# யாழ் அத்தியட்சாதீனத்தின் 53 வது வருடாந்தக் கூட்டம்

### தாரகை ஒளி

உடல் நோய்களை எனது மருத்துவ திறமையால் யான் எளிதில் குணப்படுத்துவேன். ஆனால் பாவப்பிணிகளைப் போக்கவல்ல பரம வைத்தியர் ஒருவர் இருக்கிறார். அவரைப் பற்றி நீங்கள் நன்கு அறிதல் வேண்டும்.

டாக்டர் ஜோன் ஸ்கடர்

## இலங்கையிலே திருச்சபை வளர்ச்சி

1948ம் ஆண்டு இலங்கை சுதந்திரமடைந்த போது கிறிஸ்தவர்களின் தொகை 10% ஆக இருந்தது. 1950 ம் ஆண்டு குருநாகலில் புதிய பேராலயம் பிரதிஷ்டை செய்யப்பட்டது. அப்போது பேராயராக விருந்த லக்தாசா டீ மெல் இலங்கையிலே கிறிஸ்தவர்களின் சனத்தொகை 10 வீதம் இருக்கிறது. அதன் சனத்தொகை 100% ஆகும் வரை நமது பணி ஓயாது ஒழியாது என்று குறிப்பிட்டார். இந்தப் பேச்சிற்கு பலத்த கண்டனம் பௌத்த அமைப்புக்களில் இருந்து எழுந்தன.

இப்போது இலங்கையிலே கிறீஸ்தவ சனத்தொகை 6 7% என கணக்கிடப்பட்டுள்ளது. இதற்கு பல்வேறு பொருளாதார காரணங்கள் இருக்கலாம் பறங்கியர் ஐரோப்பியர் இந்திய வம்சாவழியினர் என்பவர்கள் இலங்கையை விட்டு ஆரம்பத்திலே வெளியேறினர். 1983 ம் ஆண்டிற்குப் பின்னர் இலங்கைத் தமிழரும் பெருந்தொகையாக வெளியேறினர். ஆனால் கிறீஸ்தவர்களுடைய புலம்பெயர்வு மட்டும் இந்த வீழ்ச்சிக்கு காரணமல்ல. கிறிஸ்தவ குடும்பங்கள் அதிலும் குறிப்பாக புரட்டஸ்தாந்து குடும்பங்கள் எப்போதும் சிறிதாகவே இருக்கின்றன. இவற்றை நாம் சாதாரணமாக கூறினாலும் வேறு பல அடிப்படைக் காரணங்களும் உண்டு என்பதனை மறந்துவிடலாகாது. தென்னிலங்கையிலே பல சிங்கள தலைவர்களும் பொதுமக்களும் கிறீஸ்தவ சமயத்தை விட்டு விலகுகின்றனர். கிறிஸ்தவர், அரசியலிலும் பொது நிர்வாகத்திலும் பிரகாசிப்பது அரிது.

1987 ம் ஆண்டு பேராசிரியர் G P V சோமரத்னா "இந்திய திருச்சபை மஞ்சரி" என்ற பத்திரிகையிலே ஒரு கட்டுரை எழுதினார். அதன் தலைப்பு "இலங்கையிலே திருச்சபை வாழ்வதற்கு சவால்" என்பதாகும். அந்தக் கட்டுரையிலே இலங்கையிலே கிறீஸ்தவம் இனிப்பழம் பெரும் திருச்சபைகளின் கையில் அல்ல புதிதாக தோன்றியுள்ள பக்திப் பரவச சபைகளின் கரங்களில் தான் இருக்கிறது. எனக் குறிப்பிட்டார். பக்திப்பரவச சபைகளின் துரிதவளர்ச்சியைக் காணும் போது அதில் ஒரளவு உண்மை இருப்பதாகத் தெரிகிறது.

இதற்கு நாம் முன்னோடிகளாக இருக்க முடியாது! "பூனை கண்ணை மூடிக் கொண்டால் பூலோகம் இருண்டுபோகாது" என்பது பழமொழி இப்போது பழம் பெரும் திருச்சபை என்ன செய்யவேண்டும்? என்ற கேள்வி இயல்பாகவே எழுகின்றது.

திருச்சபையில் பக்தியியக்கத்தின் துரித வளர்ச்சி ஏற்படவேண்டும். குருமாரில் பக்கள் கடவுளைக் காண வேண்டும் வேதனைப்பட்டு வாடும் மக்கள் குறிப்பாக தமக்கருமையானவர்களை இழந்தவர்கள் கடவுளின் அன்பைக்காண ஆசைப்படுகின்றனர். பரவசக் கூட்டத்தார் இதனைச் சரிப்பாகச் செய்தனர். ஒரு மரணம் நடைபெற்றுவிட்டால் அவ்வீட்டில் இவர்கள் 10 நாட்கள் முகாம் அடித்து விடுகின்றனர். தேனிலும் இனிய பாடல்களைப் பாடுகின்றனர் மரணத்தை பற்றியும் நித்திய இளைப்பாறுதல் பற்றியும் பேசுகின்றனர். அவர்களுடைய செய்தி வேதனைப்படுபவர்களுக்கு ஔடதமாக விளங்குகின்றது. இவர்கள் வேறு என்ன நற்செய்தி முறைகளை கையாளுகின்றார்களோ தெரியாது, அவைகளை நாம் ஆராயப் புகவில்லை. ஆனால் இவர்களுடைய முறைகள் சில வெற்றியளிக்கின்றன என்பதனையும் மறுக்க முடியாது. பழம் பெரும் திருச்சபைகள் இவர்களிடமிருந்து சில பாடங்களை கற்க வேண்டும். திருச்சபை எனும் மந்தையிலிருந்து ஒரு ஆடாவது விலகிப் போகாது காப்பது குருமாருடைய கடமையாகும்.

---

(சென்ற இதழ் தொடர்ச்சி)

திரு G இராசநாயகம் சமயக்கல்விச் சபையின் பணிப்பாளர் தமது அறிக்கையை சமர்ப்பித்த போது நன்றியுடன் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

இதனையடுத்து வன்னி பகுதிக்கான செயல் திட்டம் பணிப்பாளர் திரு S இரத்தினவேல் தமது அறிக்கையை சமர்ப்பித்தார் பல கஷ்டங்கள் மத்தியிலும் திரு S இரத்தினவேல் அவர்கள் மனம் தளராது செய்யும் சேவையும், அங்கே சேவை செய்யும் சபை ஊழியர்களின் சேவையும் மிகவும் பாராட்டப்பட்டது.

மேற்படி கூட்டம் வண D C இரட்ணசிங்கம் அவர்களுக்கு மேலும் ஒரு வருட சேவை நீடிப்பை ஏகமனதாக வழங்கியது

அடுத்து சபை சகோ I இராஜ்குமார் அவர்களை ஆதீன ஊழியனாக ஏற்றுக் கொண்டது,

இதனையடுத்து சபை ஐக்கியத்திற்கான தீர்மானம் ஏகமனதாக பிரேரிக்கப்பட்டது வண T ஜெயச்சந்திரன் அவர்களின் ஜெபத்துடன் காலைநிகழ்ச்சி நிறைவு பெற்றது மாலை நிகழ்ச்

வண E P சொலமன் அவர்களது ஜெபத்துடன் ஆரம்பமானது வண T ஜெபச்சந்திரன் அவர்கள் வவுனியாவில் செய்யப்படும் ஊழியத்தின் அறிக்கையினை சமர்ப்பித்தபோது நன்றியுடன் ஏற்றுக்கொள்ளப்பட்டது, அதனையடுத்து திரு N S P தம்பு திட்டப்பணிப்பாளர் அவர்கள் வவுனியா மன்னார் மாவட்டங்களில் நடைபெற்ற வேலைகளுக்கான அறிக்கையினையும் கொழும்பு தேவாலய இல்ல (Charch House) அறிக்கையினையும் சமர்ப்பித்தபோது நன்றியுடன் ஏற்றுக்கொள்ளப்பட்டது

அடுத்து வன்னி இறையியல் கல்லூரி தலைவர் (Dean) வண A ஜெயக்குமார் தமது அறிக்கையை சமர்ப்பித்தபோது பாராட்டுடன் ஏற்றுக்கொள்ளப்பட்டது,

உதயதாரகை முகாமையாளர் வண G நடராஜா அவர்கள் தமது அறிக்கையையும், கணக்கறிக்கையினையும் சமர்ப்பித்த போது நன்றியுடன் ஏற்றுக்கொள்ளப்பட்டதுடன், ஆயுட்கால சந்தாதாரர்கள் மேலும் சேர்த்துக்கொள்ளப்படல் வேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டது,

அடுத்து பேராயர் குலேந்திரன் மன்ற (Bishop Kulendran foundation) பொருளாளர் திரு N A விமலேந்திரன் தமது அறிக்கையை சமர்ப்பித்தபோது நன்றியுடன் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அதனை அடுத்து திரு A இராஜசிங்கம் Treasurer for the Diocesan Charties fund அறிக்கையை வாசித்தபோது ஏற்றுக் கொள்ளப்பட்டது.

முதலாம் நாள் கூட்டத் தொடர் பாடல் குழுவினரின் பாடலுடனும் வண S I ஆனந்தராசா அவர்களது ஜெபத்துடனும் பேராயர் அவர்களது ஆசீர்வாதத்துடனும் நிறைவேறியது.

இரண்டாவது நாள் நிகழ்ச்சி 2000 03 03 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 00 மணிக்கு வட்டு பேராலயத்தில் துதி ஆராதனையுடன் ஆரம்பமானது. வண T ஜெயச்சந்திரன் அவர்களால் ஆராதனை நடாத்தப்பட்டது. காலை 9 00 மணிக்கு ஆரம்ப பாடசாலை மண்டபத்தில் வண T H வசந்தகுமார் அவர்களது ஜெபத்துடனும் பாடற்குழுவினரின் பாடலுடனும் இரண்டாம் நாள் கூட்டத்தொடர் ஆரம்பமானது செயலாளர் திரு A ஜெயராஜன் வரவைப் பதிவு செய்தார்.

பின்பு நிகழ்ச்சியைப் பதிவு செய்யும் செயலாளர்களில் ஒருவரான வண T ஜெயச்சந்திரன் அவர்கள் முதலாம் நாள் கூட்ட அறிக்கையை வாசித்தார் அதன் பிரதிகள் சபையினருக்கு வழங்கப்பட்டது,

பின்பு வண A A போல் அவர்கள் சுருக்கமாக Trustees of Jaffna College ன் அறிக்கையினை சமர்ப்பித்தார்.

அதனை அடுத்து வண S ஜெபநேசன் மட்டக்களப்பு பகுதி அறிக்கையினை சமர்ப்பித்தபோது நன்றியுடன் ஏற்றுக்கொள்ளப்பட்டது. வண A சவரிமுத்து அவர்கள் நுவரேலியா பகுதி அறிக்கையை சமர்ப்பித்தபோது நன்றிடன் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

திரு G இராசநாயகம் இவ்வாண்டு இந்தியாவில் நடைபெற்ற சினட் கூட்டத்தில் அறிக்கையை சுருக்கமாக வாசித்தார். இந்திய மக்கள் இலங்கைத் தமிழ் மக்களில் அக்கறைகாட்டத் தொடங்கியுள்ளதாக குறிப்பிட்டார்.

அடுத்து திருமதி K பவசிங்கம் இசைக் குழுவின் அறிக்கையினை சமர்ப்பித்தபோது நன்றியுடன் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அதனைத்தொடர்ந்து கலாநிதி செல்வி C V செல்லையா உடுவில் அதிபர், உடுவில் பெண்கள் கல்லூரி அறிக்கையினையும், பெண்கள் ஐக்கிய சங்க தலைவர் திருமதி S V ஜெபநேசன் பெண்கள் ஐக்கிய சங்க அறிக்கையினையும், கிறிஸ்தவ இறையியற் கல்லூரி பிரதி அதிபர் திரு C B Bavink தமது அறிக்கையினையும், ஊழியர் ஐக்கிய சங்க செயலாளர் வண V ராஜ்குமார் அவர்கள் தமது அறிக்கையினையும் சமர்ப்பித்தபோது நன்றியுடன் யாவும் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

அடுத்து திருமதி P ஹென்ஸ்மன் அவர்களது ஜெபத்துடன் கூட்டத்தொடர் மதிய போசனத்திற்காக ஒத்திவைக்கப்பட்டது.

மாலை நேரகூட்டத்தொடர் வண T E அசோக்குமார் அவர்களது ஜெபத்துடன் ஆரம்பமானது. திரு V மித்திரரஞ்சன் திட்டப்பணிப்பாளர் அவர்கள் பிள்ளைகள் இல்லங்கள் பற்றிய அறிக்கையினையும், அமெரிக்கன் அச்சக அறிக்கையினையும் சமர்ப்பித்த போது நன்றியுடன் ஏற்றுக்கொள்ளப்பட்டது. திரு G இராஜநாயகம் அவர்கள் மிஷன் வைத்தியசாலை பற்றிய அறிக்கையை சமர்ப்பித்த போது நன்றியுடன் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அதி வண அருட்திரு கலாநிதி S ஜெபநேசன் அவர்கள் அண்மையில் வரும் தமது 60வது பிறந்த நாளை சிறப்பாக கொண்டாடாமல் ஊழியர்களின் சம்பளத்தை கூட்டும் நோக்குடன் Dr S Jabanesan 60 th Birthday Clergy Stipend fund என்ற நிதியை திரட்டவுள்ளதாகவும் இந் நிதிக்கு சபையினர் யாவரையும் உதவி செய்யுமாறும் வேண்டுகோள் விடுத்தார்.

மாலை 3 30 மணிக்கு வண K A செல்வநாயகம் அவர்களது ஜெபத்துடன் இரண்டாம் நாள் கூட்டத்தொடர் நிறைவுபெற்றது. இதனையடுத்து வைத்திய கலாநிதி திருமதி C அம்பலவாணர் அவர்களைப்பராட்டி Harison விருது வழங்கும் வைபவம் இடம் பெற்றது.

மூன்றாவது நாள் நிகழ்ச்சி 2000 03 04 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8 30 மணிக்கு வட்டு. பேராலயத்தில் அச்சுவேலி சபை ஊழியன் வண S தேவராஜன் அவர்களது உதவிக்குரு அபிஷேக ஆராதனையுடன் ஆரம்பமானது. ஆராதனையை தொடர்ந்து சிறுண்டி தேனீர்

(2ம் பக்கம் பார்க்க)

உதயதாரகை

24 - 03 - 2000 

தென்னிந்தியத் திருச்சபை யாழ். அத்தியட்சாதின சங்கக் கூட்டம்.

# பேராயர் உரை

02—03—2000

(சென்ற இதழ் தொடர்)

கண்ணீரையும் வியர்வையையும் இரத்தத்தையும் அவமானத்தையும் மகிழ்ச்சியையும் வெற்றியையும் அது கூறிக்கொண்டே இருக்கிறது. தோல்வியையும் அவமானத்தையும் வெற்றியாக்கிய சிலுவையையே இன்று அல்லல்பட்டு ஆற்ரது கண்ணீர் வடிக்கும் அத்தனை மக்களினது தொடர் நம்பிக்கையாக விளங்குகின்றது.

## சினட் மகாசபை புதிய யாப்பு

சினட் மகாசபையின் யாப்பினைத் திருத்துவதில் கடந்த 6 வருடங்களாக ஈடுபட்டுவந்தார்கள். 1999ம் ஆண்டு ஜனவரி மாதம் சென்னையில் நடைபெற்ற விஷேட சினட் கூட்டத்தில் புதிய யாப்பின் பல அம்சங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன இவை திருச்சபையின் வாழ்வில் பல நல்ல விளைவுகள் ஏற்படுத்தும் என்பது நம்பிக்கை. இங்கு கொண்டுவரப்பட்ட சகல மாற்றங்களும் ஆதீனசங்கங்களினாலே அங்கீகரிக்கப்படவேண்டும். இதனை முதன் முதலில் அங்கீகரித்த ஆதீன சங்கங்களில் யாழ்ப்பாணமும் ஒன்று ஆனால் இப்பொழுது 8 ஆதீன சங்கங்களே புதிய யாப்பினை அங்கீகரித்துள்ளன 21 ஆதீனசங்கங்கள் அங்கீகரித்தல் அவசியமாகும். சினட் மகாசபை யாப்பு திருத்துவதற்கான குழுவை நியமித்துள்ளது இவை யாப்பின் உப விதிகளை ஆராய்ந்து வருகின்றன. இவை 2002ம் ஆண்டில் சினட் சபையில் சமர்ப்பிக்கப்படும் என எதிர் பார்க்கப்படுகிறது. இந்த ஆதீன சங்கக் கூட்டத்தில் திரு G இரத்தினநாயகம் அவர்கள் சினட் மகாசபைக் கூட்டங்கள் பற்றி உரைநிகழ்த்த இருக்கின்றார் அப்பொழுது நாம் சினட் சங்க கூட்டங்களைப்பற்றி மேலும் அறிந்து கொள்வோம்.

## இலங்கையின் திருச்சபை ஐக்கியம்

இலங்கையிலே திருச்சபை ஐக்கியம் பற்றி அதிகம் பேசப்படுகின்றது. கொழும்பு பேராயர் அதிவண கெனத் பெர்னான்டோ இது குறித்து அறிக்கைகளை விடுத்தும் கருத்தரங்குகளை நடாத்தியும் வருகின்றார். இவருக்கு அனைத்து கிறிஸ்தவர்களும் நன்றி தெரிவிக்க வேண்டியவர்களாக இருக்கின்றோம் திருச்சபை ஒருமைப்பட்டிருக்க வேண்டும் என்பதே நமது ஆண்டவரின் விருப்பம். இதனையே பவுல் அப்போஸ்தலன் கொரிந்தியருக்கு எழுதிய நிருபத்திலும் கலாத்தியர் நிருபத்திலும் திரும்பத் திரும்ப வலியுறுத்துகின்றார் ஒற்றுமையின்மை கடவுளுக்கு எதிரான பாவமாகும். இதனை நன்கு உணர்ந்தே தென் இந்திய திருச்சபை யாழ் அத்தியட்சாதினம் ஒருமைப்பாட்டு முயற்சிகளை 1940ம் ஆண்டில் இருந்தே முழு ஒத்துழைப்பு வழங்கி வந்துள்ளது. இலங்கை திருச்சபை ஒருமைப்பாட்டுத் திட்டத்தை முதலில் அங்கீகரித்தது நமது சபாசங்கமே ஆகும். அது மட்டுமின்றி ஒருமைப்பாட்டுத் திட்டத்தில் கொண்டுவரப்பட்ட ஒவ்வொரு திட்டத்தையும் அது அங்கீகரித்து வந்தது 1971ம் ஆண்டு நடைபெற்ற சம்பவங்கள் இத்திட்டத்தில் நாம் மிகவும் அவதானத்துடன் அணுகவேண்டும் எனக் காட்டியுள்ளது. ஆகவே நாம் அதிவண கெனத் பெர்னான்டோவின் முயற்சிகளை வரவேற்கும் அதே நேரத்தில் இவ் ஒருமைப்பாட்டுத் திட்டத்தை நமது அங்கத்தினர்களுக்கு நல்ல முறையில் விளக்க எமக்கு அவகாசம் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம் அது மட்டுமன்றி இந்த ஒருமைப்பாட்டுத் திட்டத்துக்காகவும் ஒற்றுமை உணர்ச்சி நம்முள் வரவேண்டும் என்பதற்காகவும் இறைவனை வேண்டிக் கொள்ளல் அவசியம்.

## அமெரிக்க தர்மகர்த்த குழு விஜயம்

சென்ற வருடம் பொஸ்டன் நகரில் நடைபெற்ற யாழ்ப்பாணக் கல்லூரி தர்மகர்த்தா சபைக் கூட்டத்திற்கு யாழ்ப்பாணத்தில் இருந்து வண A A போல், திரு C B பவிங், திருமதி விமலா ஜெபநேசன் ஆகியோருடன் நானும் கலந்து கொண்டேன். இந்த கூட்டம் அக்டோபர் மாதம் 24ம், 25ம் திகதிகளில் நடைபெற்றது யாழ்ப்பாணக் கல்லூரி ஆதீனத்தின் விதிகளைப்பற்றி செய்யவிருந்த திருத்தங்கள் செய்யப் போவதில்லை என்று முடிவு செய்துள்ளனர் நம் மக்களோடு கூடுதலான உறவை ஏற்படுத்தும் முகமாக ஒரு தூது குழுவினர் யாழ்ப்பாணம் வர இருக்கின்றனர் ஒரு வருடத்துக்குள் அவர்கள் இங்கு வந்துவிடுவார்கள் என நான் நம்புகிறேன். அப்போது நாட்டின் நிலைமையில் சிறிதளவு முன்னேற்றம் இருக்குமென்றும் அவர்கள் தமிழ் பிரதேசங்களின் எல்லா பகுதிகளையும் சென்று பார்வையிடலாம் என்றும் நம்புகின்றேன் எனவே இதனை மனதில் கொண்டு அவர்களை சந்தோஷமாக வரவேற்க நாம் ஒவ்வொருவரும் நம்மை தயார் செய்து கொள்ள வேண்டும். அமெரிக்காவில் இருந்து ஆறாய் பாய்ந்த அன்பு வெள்ளம் தொடர்ந்து பாய்கின்றது. அதனை ஏற்க நாம் தயாராவோம். இன்று அதன் ஏக பிரதிநிதியாக நம் மத்தியில் வாழும் திரு C B பவிங் அவர்களை நான் வாழ்த்தி வரவேற்கிறேன்.

## நாட்டின் சூழல்

இன்று நம் நாட்டின் இயற்கை சூழலையும் சமூகவியற் சூழலையும் பார்க்கும் போது நாம் வேதனை அடையாமல் இருக்க முடியாது. தென்னை மரங்களும் பனை மரங்களும் நூற்றுக்கணக்கில் வெட்டப்படுகின்றன. வீட்டு சொந்தக்காரன் வீட்டுக் கதவுகளையும் கூரைகளையும் கழட்டி விற்பது சர்வ சாதாரணமான விடயமாகிவிட்டது. யுத்த நிகழ்வுகளினால் 20% பனை மரங்கள் தறிக்கப்பட்டு விட்டன. இன்றும் தீவுப் பகுதிகளுக்கூடாக சென்றால் பனை மரங்கள் தறிக்கப்படுகின்ற கோரக் காட்சிகளைக் காணலாம் இயற்கை அன்னை விரைவில் கணக்கு கேட்க போகிறாள்.

சமூகவியல் சூழலும் மிகவும் மாசடைந்துள்ளது. எங்கு பார்த்தாலும் மதுபானசாலைகளும் ஆபாச படங்களை காட்டும் திரை அரங்குகளும் ஆபாச எழுத்துக்களும் காணப்படுகின்றன. உயர் கல்வி நிலையங்களில் ''ராகிங்'' என்ற பெயரில் ஆபாசமான கேலிகளும் செயற்பாடுகளும் காணப்படுவதை கண்டு நாம் வேதனைப்படுகிறோம். யாழ்ப்பாணத்தினுடைய சிறப்பு இங்கு வாழ்ந்த மக்களின் ஒழுக்கமும் கட்டுப்பாடான வாழ்வுமே யாகும். பெற்றோர்கள் பெரும்பாலும் தமது பிள்ளைகளுக்கு யாழ்ப்பாணத்து மாப்பிள்ளை வேண்டும் அல்லது யாழ்ப்பாணத்து பொம்பிள்ளை வேண்டும் என்று கேட்டுக்கொண்டது இந்தக் கட்டுப்பாட்டினால் ஆகும். நமது முன்னோர்கள் மற்றும் மற்றும் அமெரிக்க தூய்மைவாதிகள் கட்டிக்காத்த ஒழுக்க விதிகள் எல்லாம் இப்பொழுது அசட்டை செய்யப்படுகின்றன.

ஒரு சமுதாயம் முன்னேறுவதற்கு மிகவும் முக்கியமாக உள்ள மத்திய வர்க்கம் இப்போதும் நாட்டை விட்டு போய் கொண்டு இருக்கிறது மத்திய வர்க்கம் வாழ முடியாத ஒரு பிரதேசமாக யாழ்ப்பாணம் மாறிக் கொண்டிருக்கிறது. அல்லது மாற்றப்படுகிறது விஞ்ஞானக் கல்வி, ஆங்கிலக் கல்வி, போக்குவரத்து வசதி, மருத்துவம் என்பன கொழும்பை விட மிகவும் பின்தங்கிய நிலையில் இருக்கின்றன இந்த நிலைவரங்களினால் யாழ்ப்பாணத்து மூளை வளம் மேலும் மேலும் சிதைந்து போகும்மென்றே எண்ணத் தோன்றுகிறது.

## திருச்சபையின் புதிய அமைப்புக்கள்

நாட்டில் ஏற்பட்டு வரும் மாற்றங்களை ஆராயுமிடத்து புதிய திருச்சபை குழுக்களின் தோற்றத்தையும் துரித வளர்ச்சியையும் பற்றி நாம் குறிப்பிடாமல் இருக்கமுடியாது Prof G. V. P சோமரத்ன என்பவர் இந்திய திருச்சபை வரலாற்று மஞ்சரி என்ற சஞ்சிகைகளில் இலங்கையிலே கிறிஸ்தவம் வாழ்வுக்கு போராட்டம் என்ற பொருளில் கட்டுரையை எழுதியுள்ளார். அக் கட்டுரையில் இலங்கையிலே கிறிஸ்தவத்தின் எதிர் காலம் அடிப்படைவாத கிறிஸ்தவ குழுக்களின் கரத்தில் தான் இருக்கிறது என்று கூறி உள்ளார். இக்குழுக்கள் பழம்பெரும் திருச்சபைகளை விட கூடுதலான சுய நம்பிக்கையும் தனிமுறைவான தாகவும் கொண்டதாக விளங்குகின்றன. அச்சபை அங்கத்தவர் பெரும்பாலும் தசம பாகம் கொடுப்பது அவர்களுக்கு நிதிப் பிரச்சினையும் இருப்பதில்லை மேனாடுகளில் அவர்களின் நண்பர்களிடம் இருந்து பெருந்தொகையான உதவியும் கிடைக்கிறது. மேலும் அச்சபைகளிலே உயிர்த்துடிப்பும் ஆர்வமும் உள்ள தலைவர்கள் இருக்கின்றார்கள். அங்குள்ள பொது நிலையினரின் பங்களிப்பு மகத்தானது. செல்வந்தர்களையும் ஏழைகளையும் அவர்கள் கவருகின்றனர். உதாரணமாக தென் மகாணத்தில் மரபு ரீதியான திருச்சபையின் கூட்டு மொத்தமான ஆலயங்களை விட Assembly of God திருச்சபைகளின் ஆலயங்களின் கூடுதலாக இருக்கின்றன என்றும் கூறியுள்ளனர் இவர்களின் துரித வளர்ச்சிக்கு நாம் கண்மூடிகளாக இருக்க முடியாது, ஏற்கனவே இவைகளில் பல வேதாகம சங்கத்தில் அங்கத்துவம் பெற்றுவிட்டன இலங்கை தேசிய கிறிஸ்தவ சங்கத்தில் Assembly of God திருச்சபையும் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும் என்று குரல் ஓங்கி ஒலிக்கின்றது, சென்ற யூலை மாதம் நடைபெற்ற சினட் மகாசபை செயற்குழு கூட்டத்தில் சில உறுப்பினர்கள் நாம் மார்த்தோமா திருச்சபை உறுப்பினர்களுடன் ஒருமைப்பாடு பற்றி பேசுவதை விட அடிப்படை வாத குழுக்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவது அர்த்தமுள்ளது என்று குறிப்பிட்டார்கள். இத்தகைய சூழலில் நாம் அடிப்படை வாதிகளை முற்றாக புறக்கணிக்கலாமா? அவர்களைப் பற்றி நமது அணுகு முறையில் எத்தகைய மாற்றங்களை கொண்டு வரவேண்டும். இவற்றைப் பற்றி நாம் விரிவாக ஆராய வேண்டும். ஏனைய சமயத்தோடும் பிற கிறிஸ்தவ அமைப்புக்களோடும் விசேடமாக ரோமன் கத்தோலிக்க திருச்சபையோடும் கலந்து முடிவு செய்ய வேண்டியவர்களாய் இருக்கின்றோம்.

## வரும் காலம்

இன்று நமது ஆதீனத்தின் பெரும் பிரச்சனையாக இருப்பது ஆள் அணிப் பற்றாக்குறையாகும். மத்திய வர்க்கம் வாழ முடியாத ஒரு பிரதேசம் யாழ்ப்பாணம். தமிழ் மக்கள் கௌரவத்துடன் வாழமுடியாத ஒரு நாடு இலங்கை. இப்பொழுது நாட்டின் சமாதானத்தை ஏற்படுத்த நோர்வே வெளியுறவு அமைச்சர் KNUT VOLLEYBAEK பெருமுயற்சி எடுத்து வருகின்றார். அவரின் முயற்சிகளை இறைவன் ஆசீர்வதிக்க வேண்டும் என்று ஒவ்வொருவரும் பிரார்த்தனை செய்ய வேண்டும். நாம் செய்ய வேண்டிய பணிகளோ அதிகம். வேலையாட்களோ மிக மிக குறைவு. இத்தகைய சூழலில் சீ. டி. வேலுப்பிள்ளை அவர்கள் 1831ம் ஆண்டு இருந்த மிசன் சூழலைப்பற்றி எழுதிய கருத்துக்களே நமக்கு ஞாபகத்திற்கு வருகின்றன. அவர் பின்வருமாறு எழுதியுள்ளார்.

"இப்பொழுது எங்களை ஆளும் தேசாதிபதி இனிமேல் யாழ்ப்பாணத்திற்கு ஓர் அமெரிக்க மிஷனரியும் வரக்கூடாது என்று கட்டளை பிறப்பித்துள்ளார் இருக்கின்ற மிஷனரிமாரும் வியாதிக்காரரென்று அவர்கள் பேசி தங்கள் நெருக்கிடைகளினால சீக்கிரம் அவர்கள் யாழ்ப்பாணத்தை விட்டு போகும் பொழுது தங்கள் வீடுகள் பொருட்களை விற்றே போவார்கள் என்றும் நாங்கள் அவைகளை மலிவான விலைக்கு வாங்கிக் கொள்ளலாமென்று எண்ணி மனப்பால் குடித்து காத்திருந்தனராம்''

ஆளணி பற்றாக்குறையை நிவிர்த்தி செய்வதற்கு வாலிபர்

ப்பக்கம் பார்க்க)

# மட்டு நகரில் புதிய தொழிற் பயிற்சி மையம் வைபவரீதியாக ஆயரால் திறந்து வைக்கப்பட்டது

மட்டக்களப்பு மஞ்சந்தொடுவாயில் சகல வசதிகளையும் கொண்டமைந்த புதிய தொழிற்பயிற்சி மையம் (VTC) பேராயர் கலாநிதி S ஜெபநேசன் அவர்களால் 19. 3. 2000 அன்று திறந்து வைக்கப்பட்டது. மட்டுநகரில் முக்கிய பிரமுகர்கள், பெருமளவு மக்களும் கலந்து கொண்ட இந் நிகழ்வினை வண S ஜெபநேசன் தலைமை தாங்கி நடத்தினர்.

பொதுக்கூட்டம் வண. அருட்சகோதரனி செபஸ்டியனின் இறைவேண்டலுடன் ஆரம்பமானது. இப் பயிற்சி மையத்தின் அதிபர் திரு C அருமைநாயகம் அனைவரையும் வரவேற்றார். வண S ஜெபநேசன் தமது தலைமை உரையில் "1996 July 14 அன்று மூன்று கிடுகு கொட்டில்களுடன் ஆரம்பமான இந் நிறுவனம் இன்று மூன்று நவீன வசதிகளை கொண்டமைந்த கட்டிடத்தொகுதிகளாகவும் சிறப்பு மிக்க ஆசிரியர் குழாத்துடனும் வளர்ச்சி கண்டுள்ளது" என்றார். மேலும் குறிப்பிடுகையில் "நமது இலங்கையில் இருந்து 2% ஆன மாணவர்களே பல்கலைக்கழகம் நுழைகின்றனர் ஏனைய 98% மாணவர்கள் சரியான பாதையில் வழி நடத்தப்படவேண்டும் என்ற நோக்குடனேயே இதனை ஆரம்பித்துள்ளோம்.

மட்டு மாவட்டத்திலேயே ஓர் சிறந்த தொழிற் பயிற்சி மையமாக இதனை உருவாக்கியுள்ளோம். ஏழு வகையான தொழிற் கல்வி பாடநெறிகள் இங்கு கற்பிக்கப்படுகின்றன.

வெல்டிங் (ஒட்டுதல்) தச்சு வேலை, மின்சார வயறிங், குழாய் பொருத்துநல், தையல், இலத்திரனியல், Air Conditioning, refrigeration, சுருக்கெழுத்து, தட்டச்சு (தமிழ், ஆங்கிலம்) கணணி வகுப்புகளை கொண்ட Secretarial Course என்பன. அனுபவம் வாய்ந்த ஆசிரியர்களால் கற்பிக்கப்படுகின்றன.

நவீன வசதிகளாக, குளிரூட்டப்பட்ட அறைகள் TV வானொலியுடன் கூடிய ஓய்வு அறைகள் சூரியனின் வெப்பமை தாக்காத கூரைகள், இருபாலருக்குமான விடுதி வசதிகள் அழகான இயற்கை சூழல் என்பவற்றுடன் ஓர் சூழல் நேயகட்டிடமாக (Enivironmental friendiy building) திகழ்கின்றது. கட்டிடத்திற்காக மரங்கள் எதற்கேனும் பயன்படுத்தப்படவில்லை.

இக்கட்டிடத்திற்காக 30 மில்லியன் ரூபாவை இங்கு முதலீடு செய்துள்ளோம். இவற்றை வழங்கிய KNH நிறுவனம் ஜேர்மனிய அரசுக்கு நன்றி என வண ஜெயநேசன் குறிப்பிட்டார்,

மட்டு மேலதிக அரச அதிபர் திரு வி சணமுகம் பேசும்போது "மட்டக்களப்பு மக்கள் சார்பாக, இங்கு தென்னிந்திய திருச்சபையை வாழ்த்துகின்றேன். வதிவிடவசதி அற்ற, குறைந்த பாடநெறிகளை கொண்ட அரச பயிற்சிநிலையம் ஒன்றுமட்டுமே மட்டுநகரில் மஞ்சத்தொடுவாயில் உண்டு இப்புதிய மையம் மட்டு மாவட்ட மக்களுக்கு ஓர் வரப்பிரசாதம்". என்றார்

மஞ்சத்தொடுவாய் பங்குத்தந்தை சாமிநாதன் பேசுகையில், மட்டு திருமலை ஆயர் யோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை அவர்களின் சார்பாக இந்நிலையத்தினை குறித்து பெருமையடைகின்றோம், மகிழ்ச்சியடைகின்றோம், பாராட்டுகின்றோம் என குறிப்பிட்டார்

மட்டு. நகர் கல்வி அதிகாரி திரு மாணிக்கராசா பேசுகையில் "வகுப்பறைக் கல்வி, ஆசிரியர், மைய கல்வியிலிருந்து, அனுபவ மூல கல்விக்கான முக்கியத்துவம் இன்று வலியுறுத்தப்படுகின்றது. எனினும், வறிய மாணவர்கள் இதனை பெற்றுக்கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். இம்மையம், வறிய மாணவர்களுக்கு வழங்கும் வாய்ப்பு மிகப்பெரியது" என்றார் மேலும், கல்லடி இராமகிருஷ்ண மிஷனை சேர்ந்த சுவாமி அயராட் மானந்தா, புனித மெதடிஸ்த திரு அவை குரு வண S S கருணாராஜா அமெரிக்காவிலிருந்து வருகைதந்த செல்வி டயன் பெக்கர், கிழக்கு மாகாண SLCCA திட்டப்பணிப்பாளர் திரு ரஞ்சித், மாணவர்கள் சார்பில் செல்வி A மோகனாஞ்சலி ஆகியோர் உரையாற்றினார்.

பேராயர் தமது சிறப்பு விருந்தினரின் உரையில், தொழிற் கல்வி தெரியாதவன் வாழவே முடியாத சூழ்நிலை இன்று உணரப்படும்வேளையில், தொழிற் பயிற்சி நிறுவனங்களின் அவசியம் பெருகியுள்ளது. காந்தி மகான் கல்வியறிவூட்டவேண்டி மூன்று விடயங்களை குறிப்பிடுகின்றார். தலை, இதயம், கைகள், (Educating the head heart and hands) அறிவு, மனப் பக்குவம் இவைகளோடு கூட தொழிற்பயிற்சியும் அவசியம் என்பதையே இங்கு ஈண்டு வலியுறுத்துகிறார்.

1821 களில் அமெரிக்க மிஷனரிமார் யாழ் தீபகற்பத்தினுள் ஏற்றிவைத்த வித்தியாதீபத்தை இன்று நாம் மட்டக்களப்பு, மலையகம் ஈறாக இலங்கை எங்கணும் பட்டொளி வீச செய்து வருகின்றோம்.

இன்று யாழ்ப்பாணத்திலிருந்து கல்வி கற்க மாணவர்கள் மட்டக்களப்பிற்கு வரவேண்டிய நிலை உருவாகுமளவிற்கு மட்டக்களப்பு கல்வி நிலையில் வளர்ச்சி அடைந்து வந்துள்ளமையானது பாராட்டுதற்குரியது

இவை எல்லாவற்றிலும் முக்கியமாக இந்த தொழிற்பயிற்சி மையத்திற்கும், மெதடிஸ்த யேசு சபை குருமாரால் நடாத்தப்படும் கிழக்கிலங்கை தொழில் நுட்ப நிறுவனத்திற்கும் பல்கலைக்கழக அங்கீகாரத்தினை பெற்றுகொள்ளத்தக்க முன் முயற்சிகளை ஆரம்பிக்கும்படி உங்களை கேட்டுக்கொள்கின்றேன். அது பயிற்சி பெறும் மாணவர்களுக்கு நிறைந்த பலனை கொடுப்பதாக அமையும். அவ்வாறே நடைபெறும் என்றும் நம்புகின்றேன். எனவும் பேராயர் குறிப்பிட்டார்.

மேலும் மட்டக்களப்பில் செயலாற்றி வரும் நமது குருமார் யாவரையும் பாராட்டினார், விஷேடமாக திரு வண S ஜெயநேசன் அவர்களது முயற்சிகளை கொலம்பஸ் இனுடைய முயற்சிகளோடு ஒப்பிட்டு, பாராட்டி நன்றி கூறினார். துணை அதிபர் திரு R L டேவிட் நன்றி உரை வழங்கினார். பேராயரது செபத்துடனும் இறைபாசியுடனும் பொதுக்கூட்டம நிறைவடைந்தது. கூடி வந்திருந்த அனைவரும் மதிய உணவுக்காக புதிய மண்டபத்திற்கு அழைத்தச்செல்லப்பட்டனர்.

வண S ஜெயநேசன் வந்திருந்த யாவருக்கும், சிறப்பாக திட்டப்பணிப்பாளர் திரு சுரேஷ் தம்பு அவர்களிற்கும் நன்றி கூறினார்.

## வ.செ.திட்டத்தினால் தமிழர் பாதிப்பு

இம் மாதம் சமர்ப்பிக்கப்பட்ட வரவு செலவு திட்டத்தினால் அதிகம் பாதிக்கப்படுகின்றவர்கள் தமிழர்களே என்று மட்டகளப்பு மாவட்ட. எம் பி ஜோசப் பராஜசிங்கம் கூறியுள்ளார். கடவுச்சீட்டை தொலைப்பவர்கள் மீண்டும் புதிய கடவுசீட்டை பெற பத்தாயிரம் கொடுக்க வேண்டி இருக்கின்றது. பாதுகாப்பு செலவு அதிகரிக்கப்பட்டுள்ளது. பாதணிகள், சீருடைகள், இடுப்பு, நாடாக்கள், என்பன தயாரிப்பதற்கு ஒரு தொழிற்சாலை ஆரம்பிக்கப்படவுள்ளது. அது மட்டுமன்றி ஒரு பொலிஸ் பயிற்சி கல்லூரியும் ஆரம்பிக்கப்படவுள்ளது. இவையெல்லாம் தமிழர்களுக்கு மேலும் துன்பங்களை கொண்டுவரும் அன்று திரு. ஜோசப் பராஜசிங்கம் அவர்கள் குறிப்பிட்டார்.

## பேராயர் உரை..

களும் யுவதிகளும் முன்வர வேண்டும். அவர்களுக்கு வேண்டிய பயிற்சிகளை வழங்க இந்தியாவில் இருக்கும் கல்வி ஸ்தாபனங்கள் இருக்கின்றன. அவர்கள் பயிற்சி பெற்ற பிறகு சொந்த நாட்டுக்கு வந்து பணியாற்ற வேண்டும். இப்போதும் சிலர் இந்தியாவில் கற்று வருகின்றனர் இந்த வருடம் மேலும் சிலர் இந்தியாவிற்கு செல்லவிருக்கின்றனர். யாழ் பல்கலைக்கழகத்திற்கூடாகவும் சிலர் தமது மேற்படிப்பைத் தொடருகின்றனர். புதிய சூழல்கள் புதிய வாய்ப்புக்களை உண்டாக்கும். புதிய தலைவர்களை உண்டாக்கும் இந்த நம்பிக்கையுடன்தான் தென் இந்திய திருச்சபை யாழ் அத்தியட்சாதீனம் புத்தாயிரம் ஆண்டுக்குள் காலடி எடுத்து வைக்கின்றது.

நன்றி

## யாழ் அத்தி...

வழங்கப்பட்டது.

காலை 10 00 மணிக்கு மூன்றாம் நாள் கூட்டத்தொடர் ஆரம்பமானது. பிரதேச பணி அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு நன்றியுடன் ஏற்றுக்கொள்ளப்பட்டது. அதனைத்தொடர்ந்து தெ இ. திருச்சபை யாழ் அத்தியட்சாதின குருமார் ஓய்வூதிய நிதி அறிக்கை வாசிககப்பட்டது

இதற்கான நிதி குறைவாக இருப்பதால் இதனை நிவர்த்தி செய்ய சபையினர் தமது உறவினர்களின் ஞாபக நிதியாக ரூபா 5000 வைப்பிலிட்டால் உதவியாக இருக்கும் என வலியுறுத்தப்பட்டது,

அடுத்து நிதி உடமைகள் (Finance Property) அறிக்கை வாசிக்கப்பட்டது. கோட்டாவை சபைகள் ஒழுங்காகக் கட்டினால் நிதிப்பிரச்சினைகளை தவிர்த்துக் கொள்ள உதவியாக இருக்கும் என பொருளாளர் திரு C ஜெயரத்தினம் அவர்கள் சுட்டிக்காட்டினார்கள் அறிக்கை நன்றியுடன் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

பின்பு அடுத்த வருடத்திற்கான செயலாளர், பொருளாளர், தெரிவு நடைபெற்றது. செயலாளராக வண A A போல் அவர்களும் பொருளாளராக திரு C ஜெயரத்தினம் அவர்களும் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டார்கள்.

பி ப 1 · 35 மணியளவில் பேராயரின் ஜெபத்துடனும் ஆசீர்வாதத்துடனும் தெ இ திருச்சபையின் யாழ் ஆதீன 53 வது வருடாந்தக் கூட்டம் நிறைவேறியது.

## இறையியற் கல்லூரிக்கு புதிய நூல்கள்

ஜெயபுரத்தில் அமைந்துள்ள தென்னிந்திய திருச்சபையினரின் கனிஷ்ட இறையியல் கல்லூரிக்கு இந்திய ரூபாய் 6000 மதிப்புள்ள நூல்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. சமீபத்தில் இந்தியா சென்றிருந்த வண A ஜெயக்குமாரன் இவற்றினை கொள்வனவு செய்தார். பேரா

(2ம் பக்கம் பார்க்க)

## FORGIVING OTHERS

**In** our journey of life we encounter people - Human beings just like us They are people of like passions, as selfish and ambitious as we are Some of them are our close relatives, a few others are close associates but many of them are complete stangers

Conflicts are bound to arise when we encounter people, whether they are close associates or complete strangers. Conflicts arise because of selfishness and avariciousness- theirs as well as ours. In our daily life we are called upon to share our resources - human as well as natural- However, disparity is bound to occur when we tend to distribute the natural wealth because of avariciousness and selfishness-

When these conflicts are not resolved the affected feel estranged. This results in the building of a wall of barrier- Higher the wall is, more the difficulty of adjustment and compormise is. The powerful become more oppressive and violate human rights more often. They tend to legitimize atrocities by enacting oppressive laws.

On the other hand, unresolved conflicts may also lead to misunderstandings. A section of the people may tend to believe that they suffer because of the wrong done to them by the others. They become revengeful and try to rectify the supposed wrongs done to them through violent means.

On the whole every human being is guilty of sins committed against fellow human beings. Unfortunately, it is the human tendency to look at the sins of others rather than one's own. We try to remove the speck in the eyelash of others not realizing that a board is covering our own eyes However, if we look inside of us, instead of looking out, we will realize that we are equally guilty of sins committed against individuals.

Cumulatively, the sins committed by us very often far exceed the sins committed by any individual against us. In the parable of the unforgiving servant Jesus tells us that, when God is willing to forgive all our sins we are not prepared to forgive those who have sinned against us. How can we expect God to forgive us when we are not willing to forgive others?

Forgiving others may be more dificult than seeking forgiveness Let us, therefore, pray to God that God may help us to forgive others as God had forgiven us. And to show mercy to those who have caused us pain.

## COUNCIL NOMINATIONS...

(Continu from Last Issue)

**Bishop Ambalavanar Memorial Institute and diocesan project committee:**

The Bishop
The Treasurer Chairman
Pastor Colombo Church
Rev A Jeyakumaran
Mr N S P Thampoe Treasurer
Mr C D Chinnakone
Mr J Jeyakumar
Mr A Gnanathasan
Mrs Vasanthy Rajaratnam
Mr S Newton
Mr Milory R Selvarajah

**Other Appointmnts**

Manager Uduvil Girl's College
Mr A Rajasingam
Manager Morning Star
Rev G Nadarajah
Morning Star Tamil Editor
Mrs K Bavasingam
Morning Star English Editor
Rev A A Paul
Director REB
Rev A A Paul
Pension Fund Treasurer
A Jeyarajan N A Vimalendran (Acting)
Treasurer JDCSI & ACM
Mr C Jeyaratnam
**Hony Auditors**
Mr R Sabapathipillai
Mr J C Nimalan

**Medical Board**

The Bishop
Dr (Mrs) C Ambalavanar
Mr N A Vimalendran
Rev A A Paul
Rev S C Arnold
Rev Milton Soloman
Dr D C Ambalavanar
Miss S P Gulasingam
Dr V R David
Mr S R Jesupalan
Mr A Rajasingam

**Uduvil Girls' College Board**

The Bishop
The Principal
Rev S C Arnold
Rev A A Paul
Mr A Rajasingam
Dr (Mrs) C Ambalavanar
Rev D R Ambalavanar
Mr C Jeyaratnam
Rev V Rajkumar
Mr C B Bavinck
old girl Represetative

**Executive Committee:**

The Bishop
Mr C Jeyaratnam
Rev A V Jesuthasan
Rev A A Paul
Rev P J Suriakumar
Rev T Thevanesan
Rev T H Vasanthakumar
Mr N A Vimalendran
Dr (Mrs) C Ambalavanar
Dr (Miss) C V Selliah
Mrs S V Jebanesan
Mr V Mithiraranjan
Mr G Rajanayagam
Mr V R David
Mr A C Francis
Mrs K Bavasingam
Rev S C Arnold
Mrs S Jebamohan
Mrs S Thavanayagam
Mr A Rajasingam
Mr Linton Thevarajah

The following is the message read at the United Christian Service conducted at the Dutch Reformed Church Wellawatte to mark the 52nd Independence Day 4th February 2000, organised by the National Christian Council of Sri Lanka.

## FREEDOM

Freedom is the greatest gift that God gave the human person, But due to our human weakness, the first man and woman were selfish and lost their freedom.

But the only begotten Son of our Heavenly Father became man, redeemed us and once again humanity got its freedom

Today is a day we speak of celebrating independence' the day that we got freedom from our colonial rulers Unlike our neighbouring countries, Sri lanka was fortunate to have got Independence without shedding a drop of blood. However, it is a question that needs to be answered whether we Sri lankans reaped the benefits of Independence.

Are there new forces of domination? Today we are victims of Multi-national Corporations or Trans - national Corporations.

Our whole economy as well as the political situation is based to suit their needs and not our needs. In the agricultural field, we grow gerkins, tobacco, etc to suit their taste buds forgetting our staple diet. Sections of our land are set aside as Free Trade zones, Who lays down policy for these? The investors enjoy more benefits than the workers themselves. Our youth are pawns in the hands of the Multi Nationals.

Will there be a day when all our people will have equal opportunities where their rights are respected and where they could live as human beings with dignity. When that day dawns then we could say that we are truly free. That is what all our religions preach.

Let us reflect on these——

**V. N. Aiyathurai**

***Entered Glory***

**03-04 - 1981**

**"Blessed are those who die in Christ"**

Inserted by his loving Children, Sons in Law, and Daughters in law.

## Bp. Ambalavanar's Memorial Tablet Unveiled

The memorial tablet of the Late Rt. Rev. Dr. D. J. Ambalavanar second Bishop in Jaffna was unveiled by our Bishop the Rt. Rev. Dr. S Jebanesan, after the Sunday worship service on March 27th.

## Book for Sale

A few copies of the book "In obedience to the Heavenly Vision - Life and Writtings of Rt Rev Dr D J Ambalavanar' is on sale at Rs 200/- per copy. The proceeds will go for Bishop Ambalavanar Memorial Fund for Workers Pension JDCSI- Copies are avaiable at Mission House of Manipay

## *OBITUARY*

**Sabapathypillai William Jeyarajasingam (Jeyam)**

Dearly beloved husband of Thavam. Son of late Mr & Mrs Saravanamuthu Sabapathypillai of Chavakachcheri. loving father of Ranjan, Niranjala and Ravi, (all of Sydney, Australia) father - in - law of Shantho, Bisi and Chandi grandfather of David, Andrew, Michael, and Shann. Brother of Daisy Rajendra (UK) late George. Kulam (UK), late Bala, late Selvi, Rajendra, late Rani, Shakuntala and Vimala Called to be with Jesus on 18th February 2000 Funeral took place Sydney, Australia on 19th February.

## The 5th Annual Carol Service of the Tamil churches of Toronto·

This was held on the 11th of December at 6.00 p.m. at St. Margaret's in the Pines Anglican Church at 4130 Lawrence Avenue East, West Hill, Scarborough, Ontario. This too was very well attended by members of the Tamil Churches as in the case of Jaffna schools Nearly Seventeen Tamil Churches participated. Every Carol was sung in Tamil. The dress of the ladies of each Choir was difiirent from the other.

The Tamil Community in Toronto always looks forward to these two events, during Christmas. Though these two events were initiated in the same year (1991). by the same ledership, due to unavoidable circumstance, this could not be held for three years. But now, we are back on the track.

The funds collected through this event, has been sent to "Karuna Nilayam" Kilinochchi It was nearly $ 750.00. Two people needed special thanks Mrs Leela Emerson and Sarva thayaparan Ponniah.

Thanks to Fr. Rev. Bobby Mather of the Anglican Church of Canada, Diocese of Toronto He likes to challenge communities for greater leadership. These were some successful events of his leadership. You are sure to hear more from him. this year.